# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.D.W.1

| | |
|---|---|
| Name | முரளி |
| Father/Husband Name | கண்ணன் |
| Calling/Occupation | – |
| Age | 48 |
| Address | ஆம்பூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.10.2025.

(A2 to A6 present. A1absent and his absence condoned as u/s 355 of BNSS petition filed and allowed.)

**5ம் எதிரி தரப்பில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 5ம் எதிரி. நான் 2003ம் வருடம் தமிழ்நாடு காவல் துறையில் காவலராக பணியில் சேர்ந்தேன். 2005–லிருந்து சென்னையில் வேலை செய்து வந்தேன். 2016ம் ஆண்டு ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் முதல் நிலைய காவலராக பணியில் இருந்தேன். என்னுடைய எண் 663 ஆகும். காவல் கண்காணிப்பாளர் வேலூர் மாவட்டம் அவர்களின் உத்தரவின் பெயரில் ஆம்பூர் டிஎஸ்பி கணேசன் தலைமையில் நான் 28.04.2014 லிருந்து பணியாற்றி வந்தேன்.

எங்களுடைய பணி பழைய கொலை குற்றவாளிகள் கண்டுபிடிக்க முடியாதவர்களை கண்டுபிடிப்பது, செம்மர கடத்தல் வழக்கு சம்பந்தமாக எங்களுடைய பணி ஆகும். அவர் என்னிடம் 2015-ம் ஆண்டு ஆம்பூர் கிராமிய காவல் நிலைய குற்ற எண் 206/2015 மற்றும் 208/2015 ஆகிய வழக்கு சம்பந்தமாக நாங்கள் வேலை பார்த்துக்கொண்டிருந்தோம். மேற்கண்ட இரண்டு குற்ற எண்கள் சம்பந்தமாக எங்களுடைய ஆய்வாளர் பாபு ரவிசந்திரன் இருந்தார். குற்ற எண் 206/2015 மற்றும் குற்ற எண் 208/2015 ஆகிய வழக்குகளை பதிவு செய்தவர் ஆய்வாளர் பாபு ரவிசந்திரன் ஆவார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆம்பூர் காவல் நிலைய குற்ற எண் 206/2015 **முதல் தகவல் அறிக்கையின் ஜெராக்ஸ் நகல் எ.த.சா.ஆ.18** ஆகும். (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

15.06.2015 தேதியில் நான் எந்த காவல் நிலையத்தில் பணியாற்றினேன் என்றால் ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் பணியாற்றினேன். எவ்வளவு காலமாக ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் பணியாற்றினேன் என்றால் 2011 லிருந்து 2016 வரை பணியாற்றினேன். 16.06.2015 அன்று குற்ற எண் 206/2015 வழக்கு சம்பந்தமாக அதில் சம்பந்தப்பட்ட எதிரிகள் வெங்கடேசன், சத்திய மூர்த்தி, தங்கராஜ் ஆகியவர்களை நானும், காவல் ஆய்வாளரும், சபாரத்தினம், ஐயப்பன், நாகராஜன் ஆகியவர்கள் மேற்கண்ட எதிரிகளை பிடித்து வந்தோம். மேற்கண்ட நபர்களை நான் பிடித்துக்கொண்டு வந்து நான்தான் கைரேகை பதிவு செய்தேன்.

டிஎஸ்பி தங்கவேல் தலைமையில் உள்ள Team–ஐ பொறுத்தவரையில் செம்மரக்கடத்தல் வழக்கில் Shadow–ஆக இருந்தோம். அது குற்ற எண் 208/2015 வழக்கு சம்பந்தப்பட்டது. 16ம் தேதி ஆம்பூர் மகளீர் காவல் நிலையத்தில் செம்மரக்கடத்தல் வழக்கு சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை வைத்திருந்தோம். 16ம் தேதி மாலை 05.00 மணிக்கு டிஎஸ்பியின் அனுமதி பெற்று ஊருக்கு போய்விட்டேன். திரு.கணேசன் உத்தரவின் பேரில் மேலே சொன்ன மூன்று குற்றவாளிகள் மற்றும் தங்கவேல் டிஎஸ்பி ஆகிய நான்கு பேரையும் ஆம்பூர் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் வைத்திருந்தோம்.

டிஎஸ்பி தங்கவேலை பொறுத்தவரையில் செம்மரக்கடத்தல் வழக்கிலும் வெங்கடேசன், சத்திய மூர்த்தி, தங்கராஜ் ஆகியவர்களை பொறுத்தவரையில் கொலை வழக்கிலும் பிடித்து வந்து அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் வைத்திருந்தோம். ஆம்பூர் கிராமிய காவல் நிலையத்தில் இட வசதி இல்லாததால் ஆம்பூர் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் வைத்திருந்தோம். 16ம் தேதி மாலை 05.00 மணிக்கு டிஎஸ்பி அனுமதி பெற்று ஊருக்கு போன நான் 17ம் தேதி ஊரில்தான் இருந்தேன். ஆம்பூரில் ரகு என்பவர் இருசக்கர வாகன ஸ்பேர் பார்ட்ஸ் கடை வைத்துள்ளார். அவருடைய சொந்த ஊர் மோதப்பள்ளி ஆகும். எனக்கு இருசக்கர வாகனம் ஏதாவது தேவை என்றால் அவர் கடைக்கு போய் ஏதாவது ஒரு வண்டியை கேட்டு அவர் கொடுக்கும் வண்டியை எடுத்துக்கொண்டு ஊருக்கு போய் வருவேன். 17ம் தேதி எங்கள் ஊரில் மாரியம்மன் திருவிழா நடந்தது.

17ம் தேதியும் டிஎஸ்பியின் அனுமதி வாங்கிதான் ஊருக்கு போனேன். மீண்டும் 18ம் தேதிதான் டிஎஸ்பியை காலை 09.30 மணிக்கு பார்த்தேன். 18ம் தேதி முழுவதும் அங்குதான் இருந்தேன். நான் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் இருந்தேன். மதியம் 02.30 மணிக்கு கஸ்டடி முடித்து ஆம்பூர் நீதித்துறை நடுவரிடம் தங்கவேல் டிஎஸ்பியை ஆஜர்படுத்த அவருக்கு பாதுகாப்பாக நான், கணேசன் டிஎஸ்பி, பாபுராஜ் ஆய்வாளர் ஆகியவர்கள் போனோம். நாகராஜ், ஐயப்பன், சபாரத்தினம் மற்றும் நான் பாதுகாப்பு பணிக்காக போனோம். கஸ்டடி முடித்து ஆம்பூர் காவல் நிலையம் வந்துவிட்டேன். அதன் பின்னர் காவல் நிலையத்தில் இருந்தேன்.

18ம் தேதி காலை 10.00-12.00 மணி அளவில் ஆம்பூரில் அடகு கடை வைத்துள்ள சசிகுமார் என்பவர் என்னை வந்து அனைத்து மகளீர் காவல் நிலையத்திற்கு வெளியே என்னை சந்தித்தார். ஏன் நீ இங்கு இருக்கிறாய் என்று அவர் என்னை கேட்டார் செம்மரக்கடத்தல் வழக்கில் ஒரு டிஎஸ்பியை அழைத்து வந்துள்ளோம் என்று சொன்னேன். என் மகளுக்கு 19.05.2015 அன்று பிறந்தநாள். சசிகுமார் அடகு கடைக்கு 18.05.2015 அன்று மாலை போனேன். என் மகளுக்கு பிறந்தநாளுக்காக துணி எடுக்க அவர் கடைக்கு போய் அவரும் நானும் சேர்ந்து பழனியப்பா துணிக்கடைக்கு துணி எடுக்க போனோம். துணி எடுத்துவிட்டு வந்து அன்று இரவு 09.00 மணிக்கு கையெந்தி பவனில் டிபன் சாப்பிட்டுவிட்டு இரவு 10.00-11.00 மணி அளவில் அவர் வீட்டிற்கு போய்விட்டார். நானும் வீட்டிற்கு போய்விட்டேன்.

ஆய்வாளர் பாபு ரவிசந்திரன் அவர்கள் சபாரத்தினத்திற்கு வரச்சொல்லி போன் செய்தார். நான் இரவு 12.00 மணிக்கு ஆம்பூர் கிராமிய காவல் நிலையத்திற்கு போனேன். பாபு ரவிசந்திரன், சபாரத்தினம் மற்றும் நான் மூவரும் குற்ற எண் 206/2015 வழக்கு சம்பந்தப்பட்ட எதிரி பாலாஜி என்பவரை பிடிப்பதற்காக நாங்கள் மூவரும் வேலூர் கணியம்பாடி, கண்ணமங்களம் ஆகிய இடங்களில் தேடி சென்றோம். 19ம் தேதி விடியற்காலை 05.00 மணிக்கு ஆம்பூர் தாலுக்கா காவல் நிலையத்திற்கு வந்தோம்.

19ம் தேதி காலை 05.00 மணிக்கு நான் வீட்டிற்கு போய்விட்டேன். 12.00 மணிக்கு நானும் சபாரத்தினமும் ஆம்பூர் கிராமிய காவல் நிலையத்திற்கு போனோம். பாலாஜி என்ற குற்றவாளிக்கு வேலூர் ஓட்டேரியில் வீடு இருப்பதாக சொன்னார்கள். நான், சபாரத்தினம் மற்றும் பாபுராஜ் ஆய்வாளர் மூவரும் ஓட்டேரி சென்று அந்த இடத்திலிருந்து சைபர் கிரைம் போலீசாருக்கு போன் செய்து தம் CDR போட்டு அதன் பின்னர் கிளம்பி சிபிசிஐடி அலுவலகம் பிற்பகல் 03.00–04.00 மணிக்கு போனோம்.

ஆய்வாளர் பாபுராஜ் அவர் நண்பரை பார்க்க சிபிசிஐடி அலுவலகத்திற்கு போனார் நான் வெளியில் காத்திருந்தேன். அதன் பின்னர் அவர் வெளியில் வந்துவிட்டார். பின்னர் அங்கிருந்து வேலூர் SP Office க்கு நாங்கள் மூவரும் போனோம். அங்கு சைபர் செல் ஆனந்தன் SI அவர்களை பார்க்க ஆய்வாளர் போனார். அவர் பேசிவிட்டு வந்த பின்னர் நாங்கள் மாலை 06.30 மணிக்கு ஆம்பூர் வந்துவிட்டோம்.

15.06.2015 முதல் 19.06.2015 வரை நான் தனிப்பிரிவில்தான் பணியில் இருந்தேன். இந்த வழக்கிற்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. தனிப்படையில் வேலை செய்தது குறித்து வழக்கு நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளேன்.

**(குறுக்கு விசாரணைக்காக வாய்தாக ஒத்தி வைக்கப்படுகிறது)**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2025.10.14 17:15:37 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.D.W.2

| | |
|---|---|
| Name | ரகு |
| Father/Husband Name | மகாலிங்கம் |
| Calling/Occupation | Two Wheeler Shop |
| Age | 53 |
| Address | மோதகப்பள்ளி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.10.2025.

(A2 to A6 present. A1 absent and his absence condoned as u/s 355 of BNSS petition filed and allowed.)

**5ம் எதிரி தரப்பில் முதல் விசாரணை**

நான் மோதகப்பள்ளியில் வசிக்கிறேன். நான் இருசக்கர வாகனங்களை வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். ஆம்பூரில் இந்தியா ஸ்கூல் காம்ப்ளக்ஸ் எதிரில் கடை வைத்துள்ளேன். மோதகப்பள்ளி கிராமத்தில் நான் நாட்டாமைக்காரராக இருக்கிறேன். கடந்த 16.06.2015 அன்று எங்கள் ஊரில் திருவிழா. ஆஜர் 5ம் எதிரி முரளி 16ம் தேதி மாலையிலிருந்து என்னுடன்தான் எங்கள் ஊரில் இருந்தார்.

17ம் தேதியும் ஊரில் திருவிழா அப்போதும் 5ம் எதிரி எங்கள் ஊரில்தான் இருந்தார்.

**(குறுக்கு விசாரணைக்காக வாய்தாக ஒத்தி வைக்கப்படுகிறது)**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2025.10.14 17:15:49 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.D.W.3

| | |
|---|---|
| Name | சசிகுமார் |
| Father/Husband Name | சண்முகம் |
| Calling/Occupation | நகை அடகு கடை |
| Age | 49 |
| Address | ஆம்பூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.10.2025.

(A2 to A6 present. A1 absent and his absence condoned as u/s 355 of BNSS petition filed and allowed.)

**5ம் எதிரி தரப்பில் முதல் விசாரணை**

நான் பெரியார் குப்பம், மஸ்ஜித் தெரு, ஆம்பூரில் வசிக்கிறேன். ஆஜர் 5ம் எதிரி முரளியை எப்படி தெரியும் என்றால் நான் நகை அடகு கடை வைத்துள்ளேன், அவருடைய அண்ணன் என்னுடைய கஸ்டமர். எதிரி முரளியும் நகை அடகு வைக்க என் கடைக்கு வருவார். கடந்த 18.06.2015 அன்று நான் வீட்டிலிருந்து காலை 11.00 மணிக்கு என் அண்ணனுக்கு சாப்பாடு எடுத்துக்கொண்டு போனேன். போகின்ற வழியில் ஆம்பூர் தாலுக்கா காவல் நிலையம் மற்றும் அனைத்து மகளீர் காவல் நிலையம் மற்றும் டிஎஸ்பி அலுவலகம் உள்ளது.

அவ்வாறு போகும்போது காலை 11.00 மணிக்கு ஆஜர் எதிரி முரளி அங்கு நின்றுக்கொண்டிருந்தார். அவருடன் ஆஜரில் பெயர் தெரியாத ஒருவரும் நின்றுக்கொண்டிருந்தார் என்று சாட்சி ஆஜர் எதிரிகளான சபாரத்தினம், நாகராஜ், ஐயப்பன் ஆகியவர்களை அடையாளம் காண்பித்து அவர்களுடன் முரளி நின்று பேசிக்கொண்டிருந்ததாக சாட்சியம் அளிக்கிறார். முரளியை பார்த்து ஏன் இங்கு நின்றுக்கொண்டிருக்கிறாய் என்று கேட்டேன், அதற்கு அவர் செம்மரக்கட்டை வழக்கில் ஒருவரை கைது செய்து கொண்டு வந்துள்ளோம் என்று சொன்னார். அன்று மாலை சுமார் 06.00–07.00 மணிக்கு என் கடைக்கு எதிரி முரளி வந்தார். அவர் மகளுக்கு மறுநாள் பிறந்தநாள் என்று சொல்லி என் நண்பரின் துணிக்கடைக்கு அழைத்துக்கொண்டு போனேன். துணி எடுத்துக்கொண்டு டிபன் சாப்பிட்டுவிட்டு நான் என் வீட்டிற்கு போய்விட்டேன். அவர் அவரின் வீட்டிற்கு போய்விட்டார்.

**(குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்தி வைக்கப்படுகிறது)**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2025.10.14 17:15:56 +0530